## SW – பெண் குழந்தை பாலின விகிதத்தை உயர்த்திய சிறந்த மாவட்டத்திற்கான விருது

2025–2026 ஆம் நிதியாண்டில் **குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றி சாதனை புரிந்த மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு பரிசுகளாக முறையே முதல் முதல் பரிசு ரூ.1,00,000/–, இரண்டாம் பரிசு ரூ.75,000/–மும், மூன்றாம் பரிசாக ரூ.50,000/–என** ரொக்கப் பரிசினை காசோலையாக பாரட்டு பத்திரங்களுடன் உரிய மாவட்ட நிர்வாத்திற்கு வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, 2025–2026 ஆம் ஆண்டு குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றும் மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு தமிழ்நாடு பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமான பிப்ரவரி – 24 அன்று விருதுகள் வழங்கப்படவுள்ளதால், இவ்விருதுக்கான விண்ணப்ப விவரங்களை இணைப்பில் காணும் படிவத்தில் உள்ளவாறு, தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் (http://awards.tn.gov.in) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 01.10.2025 முதல் 31.12.2025 வரை பதிவேற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**தகுதிகள்**

1. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இவ்விருதுகள் பொருந்தும்.
2. அனைத்து மாவட்டங்களும் அவரவர் மாவட்டத்தில், பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில், மக்களிடையே பெண் குழந்தைகளுக்கு எதிரான மனப்பாங்கினை களைய சுவரோவியங்கள், சுவரொட்டிகள், குறும்படங்கள், துண்டு பிரசுரங்கள், கையேடுகள் தயாரித்து வெளியிடுதல், பேரணிகள், மனிதச்சங்கிலி, போட்டிகள், கலைநிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகள் வாயிலாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.
3. பெண் குழந்தைகளுக்கான நலத்திட்டங்களில் அதிகளவு பயனாளிகளை பயன்பெற செய்திருக்க வேண்டும்.
4. மாவட்டத்தில் பெண்சிசுக்கொலை போன்ற குற்றங்கள் ஏதும் நிகழாமல் பெண்குழந்தைகளுக்கு பாதுகாப்பான நிலையினை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.
5. குழந்தைகளுக்கு குறிப்பாக, பெண் குழந்தைகளுக்கு எதிராக குற்றங்கள் ஏதும் நிகழாமல் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**<u>சாதனைகள்</u>**

மாவட்டங்கள் விருதினை பெற பிறப்பு பாலின விகிதத்தினை உயர்த்தும் வகையில் கீழ்கண்ட இலக்குகளை அடைந்திருக்க வேண்டும்.( கடந்த ஆண்டின் நிலையுடன் ஒப்பிடும் போது)

1. மாவட்டத்தின் பிறப்பு பாலின விகிதத்தினை வருடத்திற்கு குறைந்தது 5 புள்ளிகள்அதிகரிக்கச் செய்திருக்க வேண்டும்.
2. மாவட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பினை வருடத்திற்கு 1.5 புள்ளிகள் வீதம் குறைத்திருக்க வேண்டும்.
3. மாவட்டத்தின் கருக்கலைப்பு விகிதத்தினை குறைத்திருக்க வேண்டும்.
4. 1994 –ஆம் ஆண்டைய முன் கருத்தரிப்பு மற்றும் மகப்பேறுக்கு முந்தைய பரிசோதனை நுட்பங்கள் சட்டம் (PCPNDT Act) மாவட்டத்தில் வலுவாக செயல்படுத்தப்பட்டு பரிசோதனை மையங்கள் (Scan Centres) தொடர் கண்காணிப்பில் இருத்தல் வேண்டும்.
5. மாவட்டத்தில் உயர் பிறப்பு விகிதத்தினை (Higher Order Birth) குறைத்திருக்க வேண்டும்.

**2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின மாநில விருதுக்கு விண்ணப்பிப்பதற்குரிய விதிமுறைகள்**

- இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 31.12.2025
- இணையதளத்தில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும்.
- இணையதளத்தில் பதிவு செய்த பிறகு அனைத்து ஆவணங்களையும் கையேடாக (Booklet) தயார் செய்து தமிழ் (அ) ஆங்கிலத்தில் அச்சு செய்யப்பட்டு இவ்வியக்குநரகம் அனுப்புமாறு மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

படிவம்

தமிழ்நாடுபெண்குழந்தைகள்பாதுகாப்புதின விருது –2026

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மாவட்டஆட்சியரின்பெயர் | | | |
| 2, | மாவட்டத்தின்பெயர் | | | |
| 3, | மாவட்டத்தில்பணிபுரிந்தகாலம் | | | |
| 4, | பிறப்புபாலினவிகிதம் (கடந்த 3 ஆண்டுகள்) | 2024 | 2023 | 2022 |
| 5. | உயர்பிறப்புவிகிதம் (கடந்த 3 ஆண்டுகள்) | 2024 | 2023 | 2022 |
| 6. | குழந்தைகள்இறப்புவிகிதம் (0–5 வயதுவரை) (கடந்த 3 ஆண்டுகள்) | 2024 | 2023 | 2022 |
| 7. | கருக்கலைப்புவிகிதம் (கடந்த 3 ஆண்டுகள்) | 2024 | 2023 | 2022 |
| 8. | மாவட்டத்தில்செயல்படும்பதிவுசெய்யப்பட்டஸ்கேன்மையங்களின்எண்ணிக்கை. | | | |
| 9. | கடந்தஆண்டுஆய்வுசெய்யப்பட்டஸ்கேன்மையங்களின்எண்ணிக்கை. | | | |
| 10. | விதிமுறைகளைபின்பற்றாதஸ்கேன்மையங்கள்மீதுஎடுக்கப்பட்டநடவடிக்கைவிவரம் | **பதிவுசெய்யப்பட்டவழக்குகள் எண்ணிக்கை** | **முடிக்கப்பட்டவழக்குகள் எண்ணிக்கை** | **வழங்கப்பட்டதண்டனைவிவரம்** |
| 11. | குழந்தைதிருமணவிவரங்கள் | **தடுக்கப்பட்டது** | **நடந்துமுடிந்தது** | **முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்தது** |
| 12. | மாவட்டத்தில்பெண்குழந்தைகளின் பாலினவிகிதத்தைஉயர்த்தஎடுக்கப்பட்டநடவடிக்கைகள் | | | |
| 13. | குழந்தைகளின்நலனுக்காகசெயல்படுத்தப்பட்டதிட்டநடவடிக்கைகளின்விவரங்கள் | | | |

| | | |
|---|---|---|
| 14. | பெண்குழந்தைகளுக்கானநிதியுதவி திட்டவிவரம்/ பெண்குழந்தைகளின்பிறப்பு (ம) வாழ்வாதாரத்தைஉறுதிசெய்வதற்கு மேற்கொள்ளப்பட்டநடவடிக்கைவிவரம் | |
| 15. | பெண்சிசுக்கொலைசம்பவங்கள் (ம) அதற்கானதண்டனைகள் | |
| 16. | விழிப்புணர்வுநிகழ்ச்சிகள் (ம) ஆராய்ச்சிபோன்றநடவடிக்கைவிவரங்கள்பதிவேற்றம்செய்தல் | |
| 17. | சான்றிதழ்களும் (ம) தொடர்புடையஆவணங்கள்விவரங்கள்பதிவேற்றம்செய்தல் | |

Tamil Nadu Girl Child Protection Day Award – 2026

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Name of the District Collector | | | |
| 2, | Name of the District | | | |
| 3, | Working Period in the district | | | |
| 4, | Sex Ratio at birth in last 3 years | 2024 | 2023 | 2022 |
| 5. | Higher Order Birth in last 3 years | 2024 | 2023 | 2022 |
| 6. | Infant Mortality rate of 0-5 years children in last 3 years | 2024 | 2023 | 2022 |
| 7. | Details of Abortion ratio in last 3 years | 2024 | 2023 | 2022 |
| 8. | No. of Registered Scan centre's functioning in district | | | |
| 9. | No. of Scan centers inspected during last 3 years | | | |
| 10 | Details of the action taken on the scan centres which do not follow the rules | **No.of cases filed** | **No.of cases closed** | **Details of pucishment** |
| 11. | Details of Child Marriage | **Stopped** | **Conducted** | **FIR filed** |
| 12 | Details of modalities and initiatives taken by you to increase girl child sex ratio in the district | | | |
| 13. | Details of any other activities implemented for the welfare of the children | | | |
| 14 | Details of assistance given through various departments/ Details of activities undertaken to ensure birth of girl children and their survival through other resources | | | |

| | | |
|---|---|---|
| 15 | Details of incidences of female infanticide and punishment details | |
| 16 | Upload detailed information about your Act/ research/Service | |
| 17 | Upload Complete details/ Certificates/ any other relevant documents | |